தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.24/மா/2022**
**நாள்.09.05.2022**

திரு. B. விஜயகுமார்,
திரு. M. விஜயன்,
சென்னை – 81. – முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர், மண்டலம்–04,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்குத் தெரு, கதவு எண்.14/15-ல் வசிக்கும் திரு. B. விஜயகுமார் மற்றும் சென்னை, தண்டையார்பேட்டை, கருணாநிதி நகர், 4–வது தெரு, கதவு எண்.3/13 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் ஆகியோரின் 16.02.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.02.2022 அன்று பெறப்பட்டு 24/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரர்களது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்குத் தெரு, கதவு எண்.14/15-ல் வசிக்கும் திரு. B. விஜயகுமார் மற்றும் சென்னை, தண்டையார்பேட்டை, கருணாநிதி நகர், 4–வது தெரு, கதவு எண்.3/13 என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 16.02..2022 நாளிட்ட தங்களது மனுவில், கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளனர்:

> “சென்னை, தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை, மண்டலம் - 4, வார்டு –38, மற்றும் 41, பகுதியில் உள்ள எண்ணூர் நெடுஞ்சாலையில் உள்ள இரு ரயில்வே சந்திப்புகளில் அடிக்கடி சரக்கு ரயில்கள் செல்வதால் மிகுந்த போக்குவரத்து

நெரிசல் ஏற்பட்டு இங்கு வசிக்கும் மற்றும் இந்த வழியாக பயணிக்கும் பொதுமக்களுக்கு மிகுந்த கஷ்டமாக இருப்பதால் தமிழக அரசு மற்றும் சென்னை மாநகராட்சி சார்பில் ஒருங்கிணைந்த ரயில்வே மேம்பாலம் (Integrated Road Bridge) அமைப்பதற்காக கடந்த 2015, மற்றும் 2019ம் ஆண்டு அரசாணை போடப்பட்டு அதற்கான தொகையும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்கண்ட மேம்பாலம் அமைய வேண்டுமென்பது இந்தப்பகுதி வாழ்மக்களின் நீண்ட கால கோரிக்கையாகும். இதற்காக அரசிற்கும் சென்னை மாநகராட்சிக்கும் பொதுமக்கள், வியாபாரிகள் மற்றும் எங்களால் பல மனுக்கள் பல்வேறு காலகட்டத்தில் அளிக்கப்பட்டன. அதன் விளைவாக அரசின் அனுமதியும் அளிக்கப்பட்டது. எனினும் சென்னை மாநகராட்சியின் அலுவலர்கள் இந்த திட்டத்தை ஆரம்பிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்காததால் தற்போது வரை மேம்பால பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் தற்போதும் இந்தப்பகுதியில் சரக்கு ரயில்கள் செல்லும் வேளையில் மிக நீண்ட வரிசையில் போக்குவரத்து தடைப்பட்டு இந்தப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வருகிறது மற்றும் சரியான நேரத்தில் வேலைக்கும் செல்ல முடியவில்லை. மருத்துவ உதவியும் கிடைப்பதில்லை. மேற்கண்ட பிரச்சனை தொடர்பாக கடைசியாக கடந்த 10.01.2022 அன்று சென்னை மாநகராட்சிக்கு எழுத்துப்பூர்வமான புகார் மனு அனுப்பியும் தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் சட்டப்படி ஒரு மனு அல்லது கோரிக்கைக்கு முப்பது நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும் என்ற அரசாணையைக்கூட மாநகராட்சி அலுவலர்கள் பின்பற்றுவது இல்லை.

எனவே இந்த மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்ட பொது நலன் சார்ந்த கோரிக்கை மனுவினை தீர விசாரணை செய்து சென்னை பெருநகர மாநகராட்சியால் செயல்படுத்தப்பட வேண்டிய மேம்பால பணியினை விரைந்து ஆரம்பிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய ஆணையினை பிறப்பிக்க வேண்டுமென தங்களை நாங்கள் இந்த பகுதி பொதுமக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

2) மனுதாரர்கள் மற்றும் மண்டல அலுவலர், மண்டலம்–04, பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியோருக்கு 28.04.2022 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 19.04.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3) மனுதாரர்கள் திருவாளர்கள் B. விஜயகுமார் மற்றும் M. விஜயன் ஆகியோர் 28.04.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

" சென்னை தண்டையார்பேட்டை – கொருக்குப்பேட்டை மண்டலம் 4ல் உள்ள எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் மணலி நெடுஞ்சாலையில் உள்ள ரயில்வே சந்திப்புகளில் சரக்கு ரயில் போக்குவரத்தையொட்டி அடிக்கடி நெரிசல் ஏற்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட பகுதியில் பாலம் அமைத்திட பெருநகர சென்னை மாநகராட்சியிடம் பலமுறை மனுக்கள் அளிக்கப்பட்டும், மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட பகுதியில் விரைவில்

மேம்பாலம் அமைத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம். மேலும் எங்களது 16.2.2022 நாளிட்ட கடிதத்தையே எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் உதவி பொறியாளர் 28.04.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பகுதியில் பொதுமக்களின் நலன் கருதி ஒருங்கிணைந்த "T" வடிவ மேம்பாலத்திற்கு பதிலாக சந்திக்கடவு-2-A மற்றும் சந்திக்கடவு 2-B யில் தனித்தனியாக மேம்பாலங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் விரைவில் துவங்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பாக எனது 28.4.2022 நாளிட்ட அறிக்கையினையே எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி உதவி பொறியாளர் தனது 28.4.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடசென்னையில் ஆர்.கே.நகரில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் மணலி சாலையில் கொருக்குப்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளுக்கிடையே இரயில்வே 2எ மற்றும் 2பி ஆகிய இரண்டு இரயில்வே சந்திக்கடவுகளுக்கு மாற்றாக எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் மணலி சாலையில் ஒருங்கிணைந்த மேம்பாலம் 117 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுமென தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி-110ன் கீழ் 28.09.2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.117.47 கோடிக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு அரசாணை (நிலை) எண்.189 நாள்:31.12.2015 மூலம் பெறப்பட்டது. மேலும் இத்திட்டத்திற்கான செலவினை பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் மாநில அரசுக்குமிடையே 50:50 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்து கொண்டு செயல்படுத்தப்படுகிறது. ஒப்பந்தகாரருக்கு 12.09.2016 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டது.

3 ஆழ்துளை கடைக்கால் (Pile foundation) மீது பளுதாங்கும் சோதனை நடத்துவதற்கு ஏதுவாக 3 கடைக்கால்கள் அமைக்கப்பட்டது. அதில் இரண்டு ஆழ்துளை கடைக்கால்கள் மீது பளு தாங்கும் சோதனை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்தினை மாற்றியமைப்பதற்காக போக்குவரத்து

காவல்துறை அனுமதி அளிக்காததால் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவில்லை.

மணலி சாலை பாலப்பகுதியினை தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை இணைப்பு கால்வாயினை கடந்து அமைக்குமாறு பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளுக்கிணங்க பாலப்பகுதியை 175மீ நீளத்திற்கு நீட்டிக்க முடிவு செய்யப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 5.11.2017 அன்று இணைப்பு கால்வாயினை கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாய்வின் போது தற்போதுள்ள பழைய பாலத்தினை இடித்துவிட்டு கால்வாய் நீர் தடைபடாவண்ணம் புதிய பாலம் அமைக்கவும் உத்தரவிட்டார்கள்.

எனவே இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.137.53 கோடிக்கு உயர்ந்துள்ளது. இம்மதிப்பீட்டுத் தொகைக்கு அரசின் திருத்திய ஆட்சிமுறை ஒப்பளிப்பு அரசாணை (2D)எண்.3 நாள்:08.01.2019 மூலம் பெறப்பட்டது.

போக்குவரத்தினை மாற்றியமைப்பதற்கு ஏதுவாக தொப்பை விநாயகர் கோவில் தெரு வழியாக எழில் நகர் பாலத்தினை கடந்து பக்கிங்ஹாம் கால்வாயின் கிழக்குப் பகுதியில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான ஆய்வு சாலையினை மேம்படுத்துமாறு போக்குவரத்து காவல்துறை கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்வாய்வு சாலையினை பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறையின் மூலம் ரூ.1.18 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதுள்ள போக்குவரத்தினை மாற்றியமைப்பதற்காக போக்குவரத்து காவல் துறையின் தடையின்மை சான்று 21.03.2020 அன்று பெறப்பட்டது. எனினும் போக்குவரத்து காவல் துறையால் போக்குவரத்தினை மாற்றியமைப்பதற்கான சோதனை ஓட்டம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பாலப்பணிகள் துவங்கப்பட அறிவுறுத்தப்பட்டது. போக்குவரத்து மாற்று ஏற்பாடு மேற்கொள்ளவேண்டிய கடிதம் ஆணையர் காவல் துறை அவர்களுக்கு 04.06.2020 அன்று அனுப்பப்பட்டது.

06.08.2020 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் கூடுதல் காவல் ஆணையர் (போக்குவரத்து) அவர்களிடம் தடையின்மை சான்று விரைந்து வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

போக்குவரத்து காவல் துறை போக்குவரத்து மாற்றியமைக்கப்படவுள்ள சாலை அருகே IOC நிறுவனத்திற்கு சொந்தமான எரிவாயு ஆலை அமைந்துள்ளதால் அந்நிறுவனத்திடம் தடையின்மைச் சான்று பெறப்பட வேண்டுமென 10.08.2020 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்தது.

இதற்கிடையே 4 வருடங்கள் கடந்தும் பணியினை துவங்க இயலாததால் இரயில்வே துறையால் இரயில்வே பகுதிக்கான ஒப்பந்தம் நவம்பர் 2020ல் ரத்து செய்யப்பட்டது.

இரயில்வே துறையின் முடிவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிக்கான ஒப்பந்தம் சிறப்பு அதிகாரி (மன்றம்) தீர்மானம் எண்.526/2021 நாள்: 26.06.2021 மூலம் ரத்து செய்யப்பட்டது.

தற்போது அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் நலன் கருதி ஒருங்கிணைந்த ‘T’ வடிவ மேம்பாலத்திற்கு பதிலாக சந்திக்கடவு 2A மற்றும் சந்திக்கடவு 2Bயில் தனித்தனியாக மேம்பாலங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சந்திக்கடவு 2Bயில் நில ஆர்ஜிதம் செய்ய தேவையில்லாததால் முதலில் அவ்விடத்தில் பாலப்பணிகள் துவங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உட்கட்டமைப்பு (ம) வசதிகள் நிதியின் கீழ் இத்திட்டத்தினை மேற்கொள்ள கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஆதாரம் பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் துவங்கப்படும்.

சந்திக்கடவு 2Bயில் பாலப்பணிகள் முடிவுற்றவுடன் சந்திக்கடவு 2Aயில் பாலப்பணிகள் துவங்கப்படும்” என தெரிவித்துள்ளார்.

4) முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், உதவி பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் வாக்குமூலம் மற்றும் அவரது 28.04.2022 நாளிட்ட அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை-கொருக்குப்பேட்டை மண்டலம் 4ல் உள்ள எண்ணூர் நெடுஞ்சாலை மற்றும் மணலி நெடுஞ்சாலையில் உள்ள ரயில்வே சந்திப்புகளில் சரக்கு ரயில் போக்குவரத்தையொட்டி அடிக்கடி நெரிசல் ஏற்பட்டு வருகிறது. ஆதலால் மேற்கண்ட பகுதியில் விரைவில் மேம்பாலம் அமைத்திட ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்கள்.

“பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி பொறியாளர் பொதுமக்களின் நலன் கருதி ஒருங்கிணைந்த ‘T’ வடிவ மேம்பாலத்திற்கு பதிலாக சந்திக்கடவு –2A மற்றும் சந்திக்கடவு 2–B யில் தனித்தனியாக மேம்பாலங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் விரைவில் துவங்கப்படும்” என வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சந்திக்கடவு 2Bயில் நில ஆர்ஜிதம் செய்ய தேவையில்லாததால் முதலில் அவ்விடத்தில் பாலப்பணிகள் துவங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உட்கட்டமைப்பு (ம) வசதிகள் நிதியின் கீழ் இத்திட்டத்தினை மேற்கொள்ள கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஆதாரம் பெறப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் துவங்கப்படும். சந்திக்கடவு 2Bயில் பாலப்பணிகள் முடிவுற்றவுடன் சந்திக்கடவு 2Aயில் பாலப்பணிகள் துவங்கப்படும்” என உதவி பொறியாளரின் மேல்வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

எண்ணூர் நெடுஞ்சாலை இரயில்வே சந்திக்கடவு எண்2A மற்றும் மணலி சாலை இரயில்வே சந்திக்கடவு எண்2பியை ஒருங்கிணைத்து மேம்பாலம் அமைக்க தேவையான நிதி ஆதாரத்தை விரைந்து பெற்று பாலப்பணிகளை துரிதமாக துவங்கிட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.B.விஜயகுமார்,
எண்.14/15, சால்ட் குறுக்குத்தெரு,
துர்காதேவி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.
2) திரு.M.விஜயன்,
எண்.3/13, 4வது தெரு,
கருணாநிதி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.
3) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4) மண்டல அலுவலர்,
மண்டலம் - 4,
பெருநகர சென்னை மாநகராட்சி,
266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை – 600 021.
5) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்